# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 159/நகராட்சி/2018**

**நாள் : 07/01/2019**

**திருமதி S. முத்துலட்சுமி,**
**புலவனார் குடி, புதுக்கோட்டை மாவட்டம்,** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**வால்பாறை நகராட்சி,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.** – **எதிர் மனுதாரர்**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், மறவா மதுரை அஞ்சல், புலவனார்குடி, கதவு எண்.518–இல் வசித்து வந்த திருமதி S. முத்துலட்சுமி அவர்களின் 05.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 159/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக வால்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், மறவா மதுரை அஞ்சல், புலவனார்குடி, கதவு எண்.518–இல் வசித்து வந்த காலம் சென்ற திருமதி S. முத்துலட்சுமி என்பவர் வால்பாறை நகராட்சி சத்துணவு கூடத்தில் சமையல் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த தனது மகள் செல்வி ச. செல்லபாண்டி என்பவர் 10.11.2014–இல் காலமாகிவிட்டார் என்றும், எனவே, அவரது இறப்புக்குப்பின் வழங்கப்படவேண்டிய சேமநலநிதித் தொகை ரூ. 1.50 இலட்சம் தனக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அத்தொகையினை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். முறையீட்டு மனுதாரரான திருமதி S. முத்துலட்சுமி 78 அகவை எய்திய மூத்த குடிமகள். இம்முறைமன்ற நடுவத்தில் தனது கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்தபின்னர். இவரும் 06.08.2018 அன்று இயற்கை எய்து விட்டார். எனவே, காலம் சென்ற திருமதி S. முத்துலட்சுமி அவர்களின் ஒரே வாரிசுதாரரான அவரது மற்றொரு மகள் திருமதி Y. அழகம்மாள் என்பவர் தனது தாய்க்கு சேரவேண்டிய மேற்குறிப்பிட்ட குடும்பநல நிதித் தொகை ரூ. 1.50 இலட்சத்தை தனக்கு வழங்கிட ஆணையிடக்கோரி 29.12.2018 நாளிட்ட கடித்தில் முறையீடு செய்துள்ளார். இது சம்பந்தமாக தனது தாயார் திருமதி S.முத்துலட்சுமி அவர்களின் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழையும் சமர்ப்பித்துள்ளார்.

2. வால்பாறை நகராட்சி, சத்துணவுக் கூடத்தில் சமையல் உதவியாளராகப் பணியாற்றிய காலம் சென்ற செல்வி. செல்லப்பாண்டி அவர்களின் இறப்புக்குப்பின் வழங்கப்படவேண்டிய குடும்ப நல நிதிக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு வால்பாறை சார்நிலைக் கருவூலத்திற்கு அனுப்பப்பட தயார் நிலையில் உள்ளது என்றும், ஓரிரு தினங்களில் மேற்குறிப்பிட்ட தொகை ரூ.1.50 இலட்சம் முறையீட்டு மனுதாரரான திருமதி S. முத்துலட்சுமி அவர்களின் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்டுவிடும் என்று 14.12.2018 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், திருமதி S. முத்துலட்சுமி அவர்கள் காலமாகிவிடவே அத்தொகையினை தனக்கு வழங்கிட ஆணையிடக்கோரி அவரது ஒரே வாரிசுதாரரான திருமதி Y. அழகம்மாள் முறையீடு செய்துள்ளார்.

3. வால்பாறை நகராட்சி, சத்துணவுக் கூடத்தில் சமையல் உதவியாளராகப் பணியாற்றிய செல்வி S. செல்லப்பாண்டி 10.11.2014–இல் காலமாகி நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன. இக்காலகட்டத்தில் செல்வி S. செல்லபாண்டி அவர்களின் வாரிசுதாரரான அவரது தாயார் திருமதி S. முத்துலட்சுமி அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய குடும்ப நல நிதித்தொகை வழங்கப்படாமலேயே அவரும் காலமாகிவிட்டார். எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் திருமதி S. முத்துலட்சுமி அவர்களுக்கு வழங்கப்படவேண்டியிருந்த குடும்ப நல நிதித் தொகையினை விதிகளின்படி வழங்கப்படவேண்டிய நபருக்கு உரிய ஆவணங்களின் அடிப்படையில் வழங்கிட உடன் நடவடிக்கை மேற்கொள்ள வால்பாறை நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினையும் 30 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறது.

**2019**– ஆம் ஆண்டு, **ஜனவரி** திங்கள், **7**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30/1/2019

செயலாளர்.

29/1/19

பெறுநர்

1. **திருமதி Y. அழகம்மாள்,**
**146–A, கிழக்கு பிரதான சாலை,**
**பழைய மார்க்கெட், இந்திரா நகர்,**
**மேட்டூர் அணை – 636 401,**
**சேலம் மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
**வால்பாறை நகராட்சி,**
**வால்பாறை,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**